பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள். .02.2018

**நிகழும் திருவள்ளுவராண்டு பிப்ரவரி மாதம் 28ம் நாள் (28.02.2018) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்:1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் ஜனவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி நகராட்சி பொறியாளர் ஜனவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் ஜனவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி துப்புரவு அலுவலர் ஜனவரி 2018ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம். |
| பொருள்.5 | பரமக்குடி நகராட்சி பராமரிப்பில் உள்ள பாரதியார் பூங்கா மற்றும் காமராஜர் நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு செல்லும் பிரதானக் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு நீரேற்றம் செய்ய இயலாமல் உள்ளதால் பிரதானக் குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்ய தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.48,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.6 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காமராஜர் நகர் மற்றும் பாரதியார் பூங்கா மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியில் உடைப்பு சரிசெய்யும் பணிக்கு 13.02.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும். |

| | | |
|---|---|---|
| 1 | திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் | 0.03% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு |
| 2 | திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் | 2.20% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம் |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.03% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.7</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2ல் காந்தி நகர் பகுதியில் பொதுமக்களின் அத்தியாவசிய தேவையான குடிநீர் வசதி ஏற்படுத்தும் பொருட்டு குடிநீர் பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு 06.02.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.17% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரர்</td><td>2.20% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.17% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.8</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 18 வரை உள்ள சிறுமின்விசைப்பம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர்செய்யும் பணிக்கு 09.02.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர்</td><td>0.02% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. பி. சசிவர்ணம், ஒப்பந்ததாரர்</td><td>3.00% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. எஸ். சந்திரன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.02% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.9</td><td>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த TDR 4972 என்ற எண்ணுள்ள டிப்பர் வாகனம் வாங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டதால், முற்றிலும் பழுதடைந்து, பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது. மேலும், மேற்கண்ட வாகனத்திற்கு RC புத்தகம் இல்லை. இவ்வாகனம் நீண்ட காலமாக பயன்பாடற்ற நிலையில் உள்ளதால், இவ்வாகனத்தை தகுதி நீக்கம் செய்து, ஏலம் விட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தினை தகுதி நீக்கம் செய்ய அனுமதி வேண்டி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு –<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நீண்ட காலமாக பயன்படுத்த இயலாத நிலை உள்ளதால், வாகனத்தினை தகுதி நீக்கம் செய்ய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.10</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 நயினார் கோவில் சாலையில் நகராட்சி பராமரிப்பில் உள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை, கழிப்பறை வசதி மற்றும் தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். நாள்.22.12.2017ம் ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் செய்ய அனுமதி வழங்கியதின் பேரில் 25.01.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர்</td><td>0.05% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. எம். சங்கர், ஒப்பந்ததாரா்</td><td>2.81% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு –<br>மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. பி. கோவிந்தன், ஒப்பந்ததாரர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.05% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.</td></tr>
<tr><td>பொருள்.11</td><td>இந்நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் குப்பை கழிவுகளை கலவை உரம் தயாரிக்க ஏதுவான முறையில் மக்கும் குப்பைகளை தனியாகவும், மக்காத குப்பைகளை தனியாகவும் பிரித்து வாங்கப்பட்டு உரக்கிடங்கில் கலவை உரம் தயாரிக்கும் தளத்தில் தாக்குகள் போடப்பட்டு வின்ட்ரோ கம்போஸ்ட் முறையில் கலவை உரம் தயாரிக்கும் பணியினை துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக மக்கும் குப்பை கழிவுகள் சிதைவடைவதை விரைவுப்படுத்தி துர்நாற்றத்தை நீக்கி ஈத்தொல்லைகளை களையும் EMI solution கலவை உரம் தயாரிக்கும் பணிக்கு தேவைப்படுகிறது. அதனை கொள்முதல் செய்திட உத்தேச செலவினம் ரூ.1,50,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>பொருள்.12</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2013–14ம் ஆண்டின் கீழ் 7KW திறன்கொண்ட சோலார் சூரியஒளி சக்தி கருவி நிறுவும் பணிக்கு ரூ.5.90 இலட்சம் மதிப்பீட்டில் செய்ய மாவட்ட ஆட்சியர், இராமநாதபுரம் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.ஆர்4019/2013, நாள்.26.09.2015ன் கீழ் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதின் பேரில் மேற்படி பணிக்கு 22.02.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.
<table>
<tr><td>1</td><td>M/s. Pursol Energy, Karur.</td><td>0.01% மதிப்பீட்டு ரேட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/s.Harshini Enterprises, Trichy</td><td>2.00% மதிப்பீட்டு ரேட்டை விட அதிகம்</td></tr>
</table></td></tr>
</table>

| | |
|---|---|
| | அலுவலகக்குறிப்பு – <br> மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Pursol Energy, Karur கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டு ரேட்டைவிட 0.01% குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம். |
| பொருள்.13 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டி.என்.65 W8911 தெருவிளக்கு பராமரிப்பு வாகனத்தின் தகுதி சான்று 14.02.2018ந் தேதியுடன் முடிவடைவதால் தகுதிச்சான்றிதழ் பணிகள் பெறும் பொருட்டு 15.02.2018ம் தேதி உள்ளூர் பணிமனைகளில் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும். <br><br> 1) M/s என்.கணபதி மோட்டார் ஒர்க்ஸ், பரமக்குடி – ரூ.48300/– <br> 2) M/s செந்தில் மோட்டார் ஒர்க்ஸ், அண்ணா நகர், பரமக்குடி – ரூ.49600/– <br> அலுவலகக்குறிப்பு – <br> 1) வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/s என். கணபதி மோட்டர் ஒர்க்ஸ், பரமக்குடி நிறுவனம் கொடுத்துள்ள விலை விகிதம் குறைவாக இருப்பதால் மன்றம் ஏற்றுக்கொண்டு அனுமதிக்கலாம். <br> 2) மேலும், அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளிகள் கோரியதையும் மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.14 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள எமனேஸ்வரம் நடுநிலைப்பள்ளி, மணிநகர் தொடக்கப்பள்ளி, காட்டுப்பரமக்குடி தொடக்கப்பள்ளி, ஜீவா நகர் தொடக்கப்பள்ளி மற்றும் மேலச்சத்திரம் தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளி கட்டிடங்களில் பூச்சுக்கள் ஆங்காங்கே பெயர்ந்தும் சுவர்களில் வர்ணம் பொழிவிழந்தும் காணப்படுவதால் மேற்படி பள்ளிக்கட்டிடங்களில் உரிய மராமத்து பணிகள் செய்யவும், வர்ணம் பூசும் பணிகள் செய்யவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. <br><br> அலுவலகக்குறிப்பு – <br> மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்கண்ட செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள்.15 | இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள டி.என்.65 W9658 ஈப்பு வாகனம் ஆயில் சர்வீஸ் செய்து 10.00 கிலோ மீட்டருக்கு மேல் ஓடிவிட்டதால் ஆயில் சர்வீஸ் செய்ய 05.07.2018ந் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும். <br> 1) M/s PMK மோட்டார்ஸ், பரமக்குடி – ரூ.21610/– <br> 2) M/s மதுரா மோட்டார்ஸ், பரமக்குடி – ரூ.22060/– <br><br> அலுவலகக்குறிப்பு – <br> 1) வரப்பெற்றுள்ள இரண்டு விலைப்புள்ளிகளில் M/s PMK மோட்டார்ஸ், பரமக்குடி நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி விலைவிகிதம் குறைவாக இருப்பதால் ஏற்றுக்கொள்ளலாம். <br> 2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரி உத்தரவு வழங்கி பணி செய்ததையும் இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.13.02.2018

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு மாசி மாதம் 1 ம் நாள் (13.02.2018) மாதம் 2018ம் ஆண்டு 13ம் நாள்.13.02.2018 செவ்வாய்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட பொருள்கள் மற்றும் தீர்மான விபரங்கள்.</u>**

| | |
|---|---|
| பொருள்.1 | வார்டு மறுவரையறை ஆணையத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்படி இந்நகராட்சி எல்லைக்குள் இயற்கை அமைப்பினை கருத்தில் கொண்டும், தெருக்கள் / நகராட்சி பகுதியில் இயல்பான அமைப்பினை கருத்தில் கொண்டும் வார்டு மறுவரையறைக்கான வரைவு கருத்துரு தயாரித்து வார்டு மறுவரையறை செய்ய தேவையான வரைபடம், படிவங்கள் மற்றும் சான்றுகள் உரிய வழிமுறையாக ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, வரைவு கருத்துரு, மறுவரையறை ஆணையத்தின் பரிசீலனைக்கு பின் பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் ஆலோசணைகள், ஆட்சேபணைகள் தெரிவிக்க கோரி தினசரி நாளிதழ், நகராட்சி மற்றும் அரசு அலுவலக அறிவிப்பு பலகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து பல்வேறு கருத்துக்களும், ஆட்சேபணைகளும் தெரிவித்து நகராட்சி ஆணையருக்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மறுவரையறை ஆணையத்திற்கும் நேரடியாகவும் / தபால் மூலமாகவும் 45 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இவை பரிசீலணை செய்யப்பட்டு, மேற்பார்வை அலுவலர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் ஆய்வுக்கு உட்டுபடுத்தப்பட்டு, மாவட்ட மறுவரையறை அலுவலர் அவர்களிடம் இறுதி வரைவு ஒப்புதலுக்கு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. இக்கருத்துருவை வரையறை ஆணையத்திற்கு உரிய வழிமுறையாக சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம். |

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
பரமக்குடி நகராட்சி